பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

09 08 2026 6 30
ஞாயிற்றுக்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1) இல்லம்தோறும் தேசியக்கொடி இயக்கத்தில் நாட்டு மக்கள் அனைவரும் ஆர்வத்துடன் பங்கேற்க வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

2) சர்க்கரை வினியோகம் சீராக இருப்பதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி அறிவுறுத்தியுள்ளார்.

3) சிறு குறு தொழில்துறையின் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கப்படும் என்று தமிழக அரசு கூறியுள்ளது.

4) இலவச மின் இணைப்பு கோரி விண்ணப்பித்த விவசாயிகளுக்கு அதனை உடனடியாக வழங்க தவெக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாமக வலியுறுத்தியுள்ளது.

5) ஆசிய இளையோர் பளுதூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Bhargavi Bellana வெண்கலப் பதக்கம் வென்றார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இல்லம்தோறும் தேசியக்கொடி இயக்கத்தில் நாட்டு மக்கள் அனைவரும் ஆர்வத்துடன் பங்கேற்க வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கோரிக்கையை விடுத்துள்ள அவர், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற உறுதிப்பாட்டுன இந்த இயக்கத்தில் அனைவரும் கலந்துகொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

சர்க்கரை உற்பத்தி குறித்து மத்திய உணவு அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார்.

புதுதில்லியில் நடைபெற்ற அந்த ஆய்வின்போது நடப்பு பருவத்தில் சர்க்கரை கையிருப்பு குறித்தும், அதன் சீரான வினியோகம் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

சர்க்கரை வினியோகம் சீராக இருப்பதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்று திரு. பிரல்ஹாத் ஜோஷி இந்தக் கூட்டத்தில் அறிவுறுத்தினார்.

<<<<>>>>

தமிழகத்தின் தொழில் வளர்ச்சியில் சிறு குறு தொழில்துறை முக்கிய பங்கு வகிப்பதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. மதன் ராஜா கூறியுள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், சிறு குறு தொழில்துறை வளர்ச்சிக்கான நடவடிக்கைகள் குறித்து அதிகாரிகளுடன் தொடர்ந்து ஆய்வு மேற்கொண்டு வருவதாக கூறினார்.

இது தொடர்பாக மாவட்டம்தோறும் முகாம் நடத்த அறிவுறுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன் காரணமாக சிறு குறு தொழில்துறை வளர்ச்சி கண்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இந்த துறையின் வளர்ச்சிக்கு தேவையான அனைத்து உதவிகளையும் தமிழக அரசு வழங்கும் என்றும் திரு. மதன்ராஜா தெரிவித்தார்.

<<<<>>>>

வேளாண் மின் இணைப்புக்கா தட்கல் முறையில் விண்ணப்பித்த 60 ஆயிரம் விவசாயிகளுக்கு உடனடியாக மின் இணைப்பு வழங்க தவெக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், 8 மாதத்திற்கும் மேலாக மின் இணைப்புக்காக இவர்கள் காத்திருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இதற்காக ஆயிரத்து 500 கோடி ரூபாயை வசூலித்துள்ள மின் வாரியம், மின் இணைப்பை வழங்க மறுப்பது அநீதியாகும் என்று டாக்டர் அன்புமணி ராமதாஸ் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

காவிரி டெல்டா மாவட்டங்களில் உள்ள நெல் கொள்முதல் நிலையங்களில் தேங்கி கிடக்கும் நெல் மூட்டைகளை உடனடியாக கொள்முதல் செய்ய தவெக அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று அமமுக பொதுச்செயலாளர் திரு. டி.டி.வி. தினகரன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்ற அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், உரிய நேரத்தில் நெல் கொள்முதல் செய்ய தவெக அரசு மறுப்பது கண்டனத்திற்குரியது என்று குறிப்பிட்டுள்ளார்.

*கொள்முதல் செய்யப்பட்ட நெல்லை முறைப்படி கிடங்குகளுக்கும், அரவை ஆலைகளுக்கும் அனுப்பி வைக்கப்படுவதையும் தவெக அரசு உறுதி செய்ய வேண்டும் என்று திரு. டிடிவி தினகரன் கேட்டுக்கொண்டுள்ளார்.*

*<<<<>>>>*

*வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்ட அரசு கல்லூரிகளின் முன்னேற்றம் அவசியம் என்று சென்னை ஐ.ஐ.டி. இயக்குநர் திரு. காமகோடி கூறியுள்ளார்.*

*சேலத்தில் நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.*

*(Sound Byte – Kamakoti – 43 Sec)*

*<<<<>>>>*

*சர்வதேச பழங்குடியினர் தினம் இன்று கொண்டாடப்பட்டது.*

*இதையொட்டி நாடு முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.*

*இந்நாளையொட்டி உதகையில் நடைபெற்ற விழாவில் ஏராளமானோர் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(Voice Byte – Saravanan – 43 Sec)*

*<<<<>>>>*

*பாரம்பரிய நெல் திருவிழா கிருஷ்ணகிரி மாவட்டம் மத்தூரில் இன்று நடைபெற்றது.*

*பெண் விவசாயிகள் இணைந்து இந்த திருவிழாவை நடத்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(Voice Byte – Raja – 49 Sec)*

*<<<<>>>>*

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

*நாமக்கல் மாவட்டத்தில் போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டத்தை மாநில அமைச்சர் திரு. லோகேஷ் தமிழ்செல்வன் தொடங்கி வைத்தார்.*

---------------

*திருவாரூர் அருகேயுள்ள சமூகநீதி விடுதியில் மாநில அமைச்சர் திரு. சம்பத் குமார் இன்று ஆய்வு மேற்கொண்டார்.*

---------------

தென்காசி மாவட்டம் புளியங்குடி அருகே ரேஷன் அரிசியைக் கடத்திச் சென்ற ஒருவரை காவல்துறையினர் கைது செய்தனர்.

---------------

மயிலாடுதுறை மாவட்டம் ஆறுபாதி பகுதியில் தென்னிந்திய அளவிலான கராத்தே, சிலம்பம் மற்றும் யோகாசனப் போட்டிகள் நடைபெற்றன.

---------------

வேளாங்கண்ணி திருவிழாவை ஒட்டி மும்பை *Bandra*-விலிருந்து வேளாங்கண்ணிக்கு வரும் 27ஆம் தேதியும், அடுத்த மாதம் 2ஆம் தேதியும் சிறப்பு ரயில் இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்தள்ளது. மறுமார்க்கத்தில் இந்த ரயில் வரும் 30ஆம் தேதியும், அடுத்த மாதம் 4ஆம் தேதியும் இயக்கப்படுகிறது.

---------------

குற்றால அருவிகளில் தண்ணீர்வரத்து அதிகரித்துள்ளதால் சுற்றுலாப் பயணிகள் குவிந்துள்ளனர்.

---------------

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

ஆசிய இளையோர் பளுதூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் *Bhargavi Bellana* வெண்கலப் பதக்கம் வென்றார்.

உஸ்பெகிஸ்தானின் தாஷ்கண்டில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 53 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

-------------

ஆசியக் கோப்பைக்கான *Free Style* ஸ்கேட்டிங் போட்டியில் இந்தியா ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப் பதக்கம் வென்றது.

ஜப்பானின் *Saitana*-வில் நடைபெற்ற இப்போட்டியில் *Siri Bandakka* வெள்ளிப் பதக்கத்தையும், *Samvith Venkatesh* வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.

------------

பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான உலக ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில் இந்தியா வெள்ளிப் பதக்கம் வென்றது.

மும்பையில் நடைபெற்ற இப்போட்டியின் குழுப் பிரிவில் இந்தியா இப்பதக்கத்தைக் கைப்பற்றியது.

---------------

*Ballarat Open Squash* போட்டியில் இந்தியாவின் *Sanya Vats* வெள்ளிப்பதக்கம் வென்றார்.

ஆஸ்திரேலியாவின் விக்டோரியாவில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் அவர் இப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

----------------

உலக *Amateur Blitz* செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியா *3* தங்கப் பதக்கங்களை வென்றது.

நைஜீரியாவின் *Abuja*-வில் நடைபெற்ற இப்போட்டியின் *20* வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் *Shejal Sanjay*-யும், *17* வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் *Saket Kumar*-ம், *17* வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் பிரிவில் *Puja Rani*-ம் தங்கப் பதக்கம் வென்றனர்.

-----------

*Lexington* சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் *Niki Kaliyanda Poonacha* - ஈக்வெடாரின் *Gonzalo Escober* இணை பட்டம் வென்றது.

ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை, *6-7, 6-3, 11-9* என்ற செட் கணக்கில் அமெரிக்காவின் *Karl Poling - Andre Ilagin* இணையை வென்றது.

------------

அமெரிக்காவின் *Eugene*-ல் நடைபெற்று வரும் *20* வயதுக்குட்பட்டோருக்கான உலக தடகள சாம்பியன் போட்டியில் மகளிர் *400* மீட்டர் தொடர் ஓட்டத்தில் இந்தியா இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளது.

------------

உலக இளையோர் வில்வித்தை போட்டியில் பங்கேற்பதற்காக *8* பேர் கொண்ட இந்திய அணி கொகரியா புறப்பட்டுச் சென்றது.

*<<<<The End>>>>*